මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01, இலங்கை.
The Secretariat, Colombo 01, Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-011-2484500, (94)-011-2484600, (94)-011-2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: (94)-011-2449823
වෙබ් අඩවිය / இணையதளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல / My No: CGO/ASM/Policy/Cir/ (VOL II)
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2020.10.02

**ஆதன முகாமைத்துவ சுற்றுநிருப இல. 05/2020**

அமைச்சுக்களின் செயலாளர்கள்

இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்

மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்

திணைக்களத் தலைவர்கள்

அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள்

அரச வங்கிகள் மற்றும் அரச உடமை கம்பனிகளின் தலைவர்கள்

அனைவருக்கும்

## அரசாங்கத்தின் நிதியல்லா ஆதன முகாமைத்துவம்

## இயங்கும் நிலையிலல்லாத அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களை அகற்றுதல் அல்லது திருத்துதல் மற்றும் பயன்படுத்துதல்

அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான அதிக எண்ணிக்கையிலான வாகனங்கள் சரியான பராமரிப்பின்று வெவ்வேறு இடங்களில் நிறுத்தப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. இந்தவகையில், அமைச்சுக்கள், திணைக்களங்கள், விஷேட செலவின நிறுவனங்கள், அரச தொழில்முயற்சிகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் உட்பட அனைத்து அரசாங்க நிறுவனங்களுக்கும் சொந்தமான இயங்கும் நிலையிலல்லாத வாகனங்களை அகற்றுதல் அல்லது திருத்துதல் மற்றும் பயன்படுத்துதல் என்பவற்றை துரிதப்படுத்த தேவைப்படுத்துவதற்கு 2020 செப்டம்பர் 02 ஆந் திகதி இடம்பெற்ற அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டது.

02. அதன்படி, அரசாங்கத்திற்குச் சொந்தமான வாகனங்கள் முறையான பராமரிப்பின்றி வெவ்வேறு இடங்களில் நிறுத்தப்படுவது குறித்து அனைத்து நிறுவனங்களின் தொடர்புடைய தலைவர்களும் கீழே கொடுக்கப்பட்டவாறு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்:

**அ. இயங்கும் நிலையிலல்லாத வாகனங்களை அகற்றுதல் மற்றும் அவற்றை திருத்துதல் விரயமாகும்**

2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரிவு I இன் பிரிவு 13.2 உடன் தொடர்புடைய வழிகாட்டுதல் இல. 03 இல் கொடுக்கப்பட்டுள்ள

நடைமுறையைப் பின்பற்றி 2020 டிசம்பர் 31 ஆம் தேதிக்கு முன்னர் இயங்கும் நிலையிலல்லாத வாகனங்கள் அகற்றப்படுதல் வேண்டும். பொதுத் திறைசேரி நிதி அல்லது மாகாண சபைகளின் நிதியினைப் பயன்படுத்தும் அரச நிறுவனங்கள், வாகனங்களை அகற்றுவதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை கீழே குறிப்பிட்டவாறு உரிய நிதியத்துக்கு வரவுவைத்தல் வேண்டும்:

I வரவுசெலவுத்திட்ட தலைப்பினைக் கொண்ட நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களை அகற்றுவதன் மூலம் கிடைக்கும் வருமானம், அத்தகைய வருமானத்தை திரட்டு நிதியத்திற்கு வரவுவைக்கும் வகையில் 20.06.02.01 என்ற வருமானக் குறியீட்டின் கீழ் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். வரவுசெலவுத்திட்ட தலைப்பினைக் கொண்டிராத நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களை அகற்றுவதன் மூலம் கிடைக்கும் வருமானம் நிரல் அமைச்சினூடாக திரட்டு நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

II மாகாண சபைகள் மற்றும் மாகாண சபைகளின் கீழ்வரும் நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களை அகற்றுவதன் மூலம் கிடைக்கும் வருமானம் மாகாண சபை நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

**ஆ. இயங்கும் நிலையிலல்லாத வாகனங்களை திருத்துதல் சிக்கனமாகக் காணப்படின் அவற்றை திருத்திப் பயன்படுத்தல்**

2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரிவு I இன் பிரிவு 13.2 உடன் தொடர்புடைய வழிகாட்டுதல் இல. 03 இல் கொடுக்கப்பட்டுள்ள சிறப்புக் குழுவால் மேலே (அ) இல் கொடுக்கப்பட்டுள்ள அகற்றப்படவேண்டிய வாகனங்களை அடையாளம் கண்டதன் பின்னர், திருத்துதல் சிக்கனமாகக் காணப்படும் என இனங்காணப்பட்ட இயங்கும் நிலையிலல்லாத வாகனங்கள் பின்வரும் நடவடிக்கைகளைப் பின்பற்றி 2020 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் திருத்தப் படுதல்வேண்டும்:

I அத்தகைய வாகனங்களைத் திருத்துவதற்கு தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஏற்பாடுகள் தேவைப்படும் நிறுவனங்கள் இணைப்பு I இல் கொடுக்கப்பட்ட தகவல்களை, கொம்ப்றோலர் நாயகத்தின் அலுவலகத்தின் பரிந்துரையுடன் தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

II மாகாண சபைகள் மற்றும் மாகாண சபைகளின் கீழ்வரும் நிறுவனங்களுக்குச் சொந்தமான அத்தகைய வாகனங்கள் மாகாண சபைகளின் நிதியைக்கொண்டு திருத்தப்படுதல் வேண்டும்.

III வரவுசெலவுத்திட்ட நிதி ஏற்பாடுகள் மற்றும் மாகாண சபைகளின் நிதியத்தினால் நிதியளிக்கப்பட்ட நிறுவனங்கள் நீங்கலான, ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்குச் சொந்தமான அத்தகைய வாகனங்கள் உரிய நிறுவனங்களின் நிதியைக்கொண்டு திருத்தப்படுதல் வேண்டும்.

03. மேலே (02) குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகற்றப்பட்ட அல்லது திருத்தப்பட்ட வாகனங்கள் பற்றிய தகவல்களை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்காக 2021 சனவரி 15 ஆந் திகதிக்கு முன்னர் இணைப்பு II இன் படி கொம்ப்றோலர் நாயகத்தின் அலுவலகத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். வரவுசெலவுத்திட்ட நிதியினைப் பயன்படுத்தி திருத்தப்பட்ட வாகனங்கள் பற்றிய தகவல்கள் கொம்ப்றோலர்

நாயகத்தின் அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், அத்தகைய வாகனங்கள் போதுமான வாகனங்கள் இல்லாத நிறுவனங்களுக்கு கொம்ப்றோலர் நாயகத்தின் அலுவலகத்தால் முறையாக ஒதுக்கீடுசெய்யப்படும்.

**ஒப்பம்/**
**எஸ்.ஆர். ஆட்டிகல**
**திறைசேரியின் செயலாயர்**

பிரதிகள்: 1. சனாதிபதியின் செயலாளர்

2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4.தேசிய வரவுசெலவுத்திட்டப் பணிப்பாளர் நாயகம்
5.மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம்
6. கணக்காய்வாளர் நாயகம்

பின்னிணைப்பு I

**திருத்துதல் சிக்கனமாகக் காணப்படும் இயங்கும் நிலையிலல்லாத வாகனங்களைத் திருத்துவதற்கு வரவுசெலவுத்திட்ட நிதி ஏற்பாடுகளுக்கானகோரிக்கை**

1. **அமைச்சு/திணைக்களம்/நிறுவனம்: ...........................................................................**

2. **திணைக்கள / நிறுவனத் தலைவர்களின் சிபாரிசு**

   கீழே குறிப்பிடப்பட்ட பதிவிலக்கங்களைக் கொண்ட வாகனங்களைத் திருத்துவதற்கு மதிப்பிடப்பட்ட செலவினத்திற்கான வரவுசெலவுத்திட்ட நிதியினைப் பெறுவதற்கு ஏற்பாட்டு அங்கீகாரத்திற்காக சிபாரிசுசெய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுகின்றது.

| தொ. இல. | பதிவு இல. | வாகன வகை (கார், டபல்கெப், போன்ற.) | தயாரிப்பு (டொயடா, நிஸ்ஸான், போன்ற) | மாதிரி கொரல்லா, ஸன்னி, போன்ற) | உற்பத்தி வருடம் | மைலேஜ் (கி.மீ) | இயங்குநிலையில் அல்லாத வாகனம் நிறுத்திவைக்கப்பட்டிருந்த காலப் பகுதி (வருடம்/மாதம்) | திருத்துவதற்கு மதிப்பிடப்பட்ட தொகை (ரூபா) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | மீண்டெழும் | மூலதனம் |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

......................................................... ................................

திணைக்கள/நிறுவனத் தலைவர் திகதி

கையொப்பம் மற்றும் இறப்பர் முத்திரை

3. **அமைச்சு / இராஜாங்க அமைச்சின் செயலாளரது சிபாரிசு**

மேற்கூறிய சிபாரிசுக்கமைய, கீழே குறிப்பிடப்பட்ட பதிவிலக்கங்களைக் கொண்ட வாகனங்களை திருத்துவதற்கு மதிப்பிடப்பட்ட செலவினத்திற்கு வரவுசெலவுத்திட்ட நிதி ஏற்பாட்டு அங்கீகாரத்திற்காக சிபாரிசுசெய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுகின்றது.

சிபாரிசுசெய்யப்பட்ட வாகனங்கள்: ...................................................

................................................................. ................................

அமைச்சு / இராஜாங்க அமைச்சின் செயலாளர் திகதி

கையொப்பம் மற்றும் இறப்பர் முத்திரை

பின்னிணைப்பு II

**ஆதன முகாமைத்துவ சுற்றுநிருப இல. 05/2020 இன் படி இயங்கும் நிலையிலல்லாத விற்பனைசெய்யப்பட்ட அல்லது திருத்தப்பட்ட வாகனங்கள் பற்றிய தகவல்களை அமைச்சரவைக்கு சமர்ப்பித்தல்**

**பின்வரும் தகவல்கள் 011 – 2151417 இலக்க தொலைநகல் மூலமும் Excel மென்பிரதி cgo@mo.treasury.gov.lk என்ற மின்னஞ்சலுக்கும் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்**

**1. விற்பனை செய்யப்பட்ட வாகனங்கள் பற்றிய தகவல்**

| தொடர் இல. | பதிவு இல. | வாகன வகை (கார், டபல்கெப் போன்ற) | தயாரிப்பு டொயடா, நிஸ்ஸான் போன்ற) | மாதிரி (கொரல்லா, சன்னி போன்ற) | தயாரிப்பு வருடம் | விற்பனை (√) | | விற்பனைவருமானம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | வாகனமாக | துண்டாக | |
| | | | | | | | | |
| | | | | | | | | |

.........................................................                    ...............................

திணைக்கள/நிறுவனத் தலைவர் கையொப்பம் மற்றும் இறப்பர் முத்திரை                    திகதி

**2. திருத்தப்பட்ட வாகனங்கள் பற்றிய தகவல்**

| தொடர் இல. | பதிவு இல. | வாகன வகை (கார், டபல்கெப் போன்ற) | தயாரிப்பு டொயடா, நிஸ்ஸான் போன்ற) | மாதிரி (கொரல்லா, சன்னி போன்ற) | தயாரிப்பு வருடம் | திருத்தற் செலவு (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |

.........................................................                    ...............................

திணைக்கள/நிறுவனத் தலைவர் கையொப்பம் மற்றும் இறப்பர் முத்திரை                    திகதி